**ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட் – 2017**

---

ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட்டினதும் (''கம்பனி'') கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் (''தொகுதி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) பறக்கும் சாம்பல் மற்றும் கீழ் கழிவுப்பொருளை (fly ash and bottom slag) பயன்படுத்தி சீமெந்து அடிப்படையிலான உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக இலங்கையில் கூட்டுமுயற்சியொன்றை ஸ்தாபிப்பதற்காக 2012 யூலை 27 இல் அம்ராட் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டுடன் கூட்டு உடன்படிக்கையொன்றை தொகுதி கைச்சாத்திட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொகுதியால் ரூபா 7,364,447 முதலீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2014 மார்ச் 27 இல் உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு சபை தீர்மானித்திருந்தது. இது தொடர்பில் ஏற்பட்ட கிரயங்களின் அறவீட்டு தன்மை தொடர்பில் என்னால் போதியளவும் பொருத்தமானதுமான சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட முதலீடு தொடர்பில் ஏதாவது நட்டக்கழிவு இனங்காணப்பட வேண்டியுள்ளதா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாதிருந்தது.

(ஆ) சுயாதீனமான உறுதிப்படுத்தல்கள் அல்லது கொடுக்கல் வாங்கல் ரீதியான ஆதாரங்கள் / முறையான பெறுமதி மதிப்பீடுகள் / பௌதீக ரீதியான இருப்பு மெய்மையாய்வு தாள்கள் காணப்படாததனால் அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கின்ற ரூபா 7,505,626 தொகையான மீற்றர் மூடுபெட்டி (meter enclosure) இருப்பு மீதிகளின் உள்ளதன்மை மற்றும் பெறுமதி மதிப்பீடு தொடர்பில் என்னால் திருப்திப்பட முடியாதிருந்தது.

(இ) ஓய்வூதிய நலன் கடப்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட ரூபா 642,434 தொகை கடந்த நிதியாண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட மீதியாக உள்ளதுடன் மீளாய்வாண்டிற்கான ரூபா 438,231 பணிக்கொடை அறவீடு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பான இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 1) 111-124 பந்திகளிற்கிணங்க (அ) நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட அளவீட்டு அடிப்படை அல்லது அடிப்படைகள் மற்றும் (ஆ) நிதிக்கூற்றுக்களை விளங்கிக்கொள்வதற்கு பொருத்தமானதாக பயன்படுத்தப்பட்ட ஏனைய கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கி தொகுதியானது அதனது முக்கியத்துவமான கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்த வேண்டியிருந்தது. எனினும், அத்தகைய கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலுள்ள மாற்றங்கள் மற்றும் தவறுகள் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 8) 49 ஆம் பந்தியின் பிரகாரம் தொகுதியானது பின்வருனவற்றை (அ) முன்னைய காலப்பகுதி தவறின் தன்மை; (ஆ) நடைமுறை சாத்தியமாக சமர்ப்பிக்கப்பட்ட முன்னைய காலப்பகுதி ஒவ்வொன்றிற்கானவை; (இ) சமர்ப்பிக்கப்பட்ட மிகவும் முன்னைய காலப்பகுதியின் ஆரம்பத்திலுள்ள சீராக்கல் தொகை என்பவற்றை உள்ளடக்கி முன்னைய காலப்பகுதி தவறுகள் தொடர்பாக வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அத்தகைய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வருமான வரிகள் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 12) 12-14 மற்றும் 15-20 ஆம் பந்திகளிற்கிணங்க தொகுதியானது இலாப அல்லது நட்ட கூற்றிற்கான உரிய அறவீடு / தள்ளுபடியுடன் சேர்த்து ஒவ்வொரு நிதிக் காலப்பகுதிக்காகவும் தற்போதைய வரிப் பொறுப்பு / சொத்து மற்றும் பிற்போடப்பட்ட வரி பொறுப்பு / சொத்தை இனங்காண வேண்டியிருந்த போதிலும் தொகுதியானது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் மேற்குறிப்பிடப்பட்டவைக்காக கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) தொடர்புபட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்கள் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 24) 13, 14, 18, 19, 25 மற்றும் 26 ஆம் பந்திகளிற்கிணங்க தொகுதியானது அறிக்கையிடப்படும் நிறுவனம் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரிற்கிடையே கட்டணம் அறவிடப்படுகின்றனவா என்பது தவிர வளங்கள், சேவைகள் அல்லது கடப்பாடுகளின் பரிமாற்றம் ஒன்றாக உள்ள தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கலை வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அத்தகைய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தொடர்புபட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்கள் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 24) 17 ஆம் பந்தியின் பிரகாரம் தொகுதியானது பின்வரும் (அ) குறுங்கால ஊழியர் நலன்கள்; (ஆ) ஊழியத்தின் பின்னரான நலன்கள்; (இ) ஏனைய நீண்டகால நலன்கள்; (ஈ) முடிவுறுத்தல் நலன்கள்; மற்றும் (உ) பங்கீட்டு அடிப்படையிலான கொடுப்பனவு வகைப்படுத்தல்கள் ஒவ்வொன்றிற்காகவும் மொத்தமாகவும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிறுவனத்தின் நடவடிக்கைகளை திட்டமிடுதல், வழிநடாத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் என்பவற்றிற்கான அதிகாரம் மற்றும் பொறுப்பை கொண்டுள்ள மக்களாகவுள்ள அப்பிரதான முகாமைத்துவ ஆளணியினரிற்கான இழப்பீட்டை வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அத்தகைய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தொகுதியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது,

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் சாத்தியமான தாக்கங்களினைத் தவிர்த்து கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | 2016 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடுகளின் கீழ் வருமான வரி மற்றும் பிற்போடப்பட்ட வரி என்பன முறையே ரூபா 10,624,577 மற்றும் ரூபா 2,060,609 ஆகக் காணப்பட்டன. |
| (ஆ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 2017 ஆம் ஆண்டிற்கான 01 ஆம் மற்றும் 04 ஆம் காலாண்டுகளிற்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி திரும்பல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் தொழிற்பாடுகள் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் ரூபா 93,216,779 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 35,825,112 தேறிய நட்டமொன்றை விளைவித்திருந்தமையினால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 129,041,891 வீழ்ச்சியொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. நிதிக் கிரயம் ரூபா 11,009,179 ஆல் அதிகரித்தமை, மொத்தலாபம் ரூபா 91,959,822 ஆல் குறைவடைந்தமை மற்றும் முன்னைய ஆண்டில் ரூபா 20,863,826 ஆன பணிக்கொடை ஏற்பாடுகள் திரும்பியமை என்பன இவ் வீழ்ச்சிக்குப் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியினால் கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பரிமாற்ற வரிசைகள் மற்றும் மின்சார விநியோக உப நிலையங்களை நிர்மாணிக்கும் வர்த்தகங்கள், புதுப்பிக்கத்தக்க சக்தி செயற்திட்டங்களினை நிர்மாணித்தல், பராமரித்தல் மற்றும் செயற்படுத்துதல் மற்றும் மின்வலு உற்பத்திக்குத் தேவையான வேலைகள், புதுப்பிக்கத்தக்க சக்தியின் அபிவிருத்திக்கு அவசியமாக காணப்படுகின்ற செயற்பாடுகளில் ஈடுபடுதல் மற்றும் இலங்கை மின்சார சபையின் சேவைகளுக்கான மனிதவலுவை ஆட்சேர்ப்புச் செய்து வழங்குதல் என்பவற்றில் ஈடுபடுவதற்காக 2011 சனவரி 09 இல் கம்பனி கூட்டிணைக்கப்பட்டிருந்த போதிலும் மின்மானிப் பலகைகளை உற்பத்தி செய்வதற்காக தொழிற்சாலையொன்றை நிர்மாணித்தல் மாத்திரமே ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது கம்பனியால் செயற்பாடுகளிலிருந்து (முதலீட்டு வருமானம் தவிர) எந்தவொரு வருமானமும் உழைக்கப்பட்டிருக்காததுடன் மீண்டெழும் செலவினமாக ரூபா 40,042,041 தொகை ஏற்பட்டிருந்தது.

(ஆ) அம்ராட் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட், துணிகர முயற்சியுடன் பறக்கும் சாம்பல் மற்றும் கீழ் கழிவுப்பொருளினை பயன்படுத்தி சீமந்து அடிப்படையிலான உற்பத்திப்பொருட்களினை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக தொழிற்சாலையொன்றினை நிர்மாணிப்பதற்கு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொகுதி ரூபா 7,364,447 தொகையினை முதலீடு செய்திருந்தது. எவ்வாறாயினும், வர்த்தக பங்காளர் ஒருவர் காணப்படாததன் காரணமாக கூட்டுமுயற்சி உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டு சொத்து விளைவற்றிருந்தது. விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் பெறுமதி கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ஆதனத்தின் பெறுமதி மதிப்பீடு 2016 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 3,200,000 ஆக காணப்பட்டது. கம்பனியின் பணிப்பாளர் சபை சொத்துக்களை இலங்கை மின்சார சபைக்கு கையளிப்பதற்கு தீர்மானித்து 2016 நவம்பர் 10 இல் பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டிருந்த போதிலும் 2018 செப்தெம்பர் 15 வரை இலங்கை மின்சார சபையால் சொத்துக்கள் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

இயற்கை அனர்த்தம் ஒன்றின் காரணமாக குபல்கமுவ நுண் நீர் மின்வலுப் பொறி சேதமடைந்திருந்ததென குறிப்பிடப்பட்டிருந்ததுடன் சேதங்களை சரிசெய்வதற்கு கம்பனியால் ரூபா 2.9 மில்லியன் தொகை செலவிடப்பட வேண்டியிருந்தது. அத்துடன் இவ் இயற்கை அனர்த்தம் காரணமாக குபல்கமுவ நுண் நீர் மின்வலுப் பொறி ஏறத்தாழ 50 நாட்கள் காலப்பகுதியொன்றிற்கு விளைவற்றிருந்தது. இயற்கை அனர்த்தங்களிலிருந்து சாத்தியமான சேதங்களை குறைப்பதற்கு கம்பனியால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டமொன்று (எஸ்ஓஆர்) இல்லாமல் பதவியணியினர் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) எந்தவொரு முகாமைத்துவக் கட்டணமும் அறவிடப்படாமல் கம்பனியின் பதவியணியினர் துணைக் கம்பனிகளின் நிர்வாகத்தில் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 வருடாந்த அறிக்கை

கம்பனி ஆரம்பித்ததிலிருந்து கம்பனியால் வருடாந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக கம்பனியால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

கம்பனிக்கான உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு மற்றும் இலங்கை மின்சார சபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவுகளினாலும் மீளாய்வாண்டின் போது கம்பனியில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.4 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் மீளாய்வாண்டின் போது கம்பனியால் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

2017 ஆம் ஆண்டிற்காக தொகுதியால் பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) சம்பளம் | கைவிரல் அடையாள இயந்திரங்கள் கம்பனியால் உரித்தாக்கப்பட்டு கம்பனியின் சம்பள தொகுதியுடன் இணைக்கப்பட்டிருக்காதமை மேலதிக நேரக் கொடுப்பனவு கணிப்பீடு தொடர்பாக விரிவான கைமுறை வேலைகளை விளைவித்திருந்தது. |
| (ஆ) கணக்கீடு | (i) முறையான நடைமுறையொன்றின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படாமை. |
| | (ii) கம்பனிகளிற்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் தெளிவாக இனங்காணப்பட்டிருக்காததுடன் வருடாந்தக் கணக்காய்வு நோக்கங்களிற்காக மாத்திரமே ஆண்டிறுதியில் கம்பனிகளிற்கிடையேயான |

கணக்கிணக்கங்கள் தயாரிக்கப்படுகின்றன. இது ஆண்டிறுதியில் நேரமெடுக்கும் நடைமுறையை விளைவித்திருந்தது.

(iii) நாட்குறிப்பு பதிவுகளை மேற்கொள்வதற்காக முன்வைக்கப்படும் போது முறையான செயன்முறை, கொள்கை அல்லது ஏதாவது அங்கீகார செயன்முறையை கம்பனி கொண்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| (இ) நடைமுறைக் கையேடு | ஏற்படக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனம் அல்லது ஏதாவது சாத்தியமான தவறுகள் மற்றும் முறைகேடுகளை தடுப்பதற்கு அல்லது கண்டுபிடிப்பதற்கு முன்வைக்கப்படுகின்ற போது கட்டுப்பாடுகளை காட்டுகின்ற எழுத்துமூலமான நடைமுறைக் கையேடு காணப்படவில்லை. |